## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என அதிகார சபையினால் முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகார சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகார சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- அதிகார சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு

அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்க்ளுடன் இணங்காமை**

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**<br>2018 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் ஆதனம், பொறி, இயந்திர உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போது ஏற்பட்ட மிகை ரூபா 38,915,343 ஆனது காசுப்பாய்ச்சல் கூற்றின் தொழிற்பாட்டு செயற்பாட்டு நடவடிக்கையின் சீராக்கத்தின் கீழ் காட்டப்பட்டதுடன் மற்றும் முதலீட்டு செயற்பாட்டு நடவடிக்கையில் பாய்ச்சலாக காட்டப்பட்டதனால் தொழிற்பாட்டு செயற்பாட்டு நடவடிக்கையில் அத் தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் முதலீட்டு செயற்பாட்டு நடவடிக்கையில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 2018 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் மீள் மதிப்பீட்டு மிகை தொழிற்பாட்டு செயற்பாட்டு நடவடிக்கையில் காட்டப்பட்டுள்ளதுடன், மேலும் முதலீட்டு செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து குறைத்து காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததால் ஏற்பட்ட தவறுகளை சீர் செய்து 2019 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு காசுப்பாய்ச்சல் கூற்றின் மூலம் சீராக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இற்கு இணங்க செயற்பட வேண்டும் |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பணியாளர் ஊக்குவிப்பு கொடுப்பனவு ரூபா 7,507,875 ஆனது 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தாலும் நிதிநிலைமைக்கூற்றில் அதற்காக எந்த ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 மே 23 ஆம் திகதியில் திறைசேரியினால் 2018 ஆம் ஆண்டிற்கான பணியாளர் ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தன. அதேவேளை, 2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலமைக்கூற்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், 2018 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளுக்கு ஏற்பாடுகள் | சரியாக கணக்கில் காட்டப்பட்டிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படாமையினால் தவறுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும், அவற்றை 2019 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு நிதிநிலமைக்கூற்று சமர்ப்பிப்போம். | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் வினைத்திறனின்மையினை பரிசோதனையை இலங்கை மேம்பாட்டு நிர்வாக நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்கு அதிகார சபையினால் விண்ணப்பம் கோரப்பட்டதுடன் அது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே எந்தவிதமான ஒப்பந்தங்களும் மெற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதனால் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 2,150,000 தொகை எதிர்பார்பார்க்கப்பட்ட செலவினமாக கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, தற்போதைய பொறுப்புகள், பயிற்சி மற்றும் கருத்தரங்கு செலவுகள் குறிப்பிட்ட தொகையினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தன. | ஊழியர்களின் செயல்திறனின்மை பரிசோதிப்பதற்கு இலங்கை மேம்பாட்டு நிர்வாக நிறுவனத்துடன் கலந்தாலோசித்து, செயல்திறனான தேர்வினை நடத்த ரூபா 2,150,000 மதிப்பீடு செய்யப்பட்டு அந்த நிறுவனம் உரிய செயற்பாட்டை யெற்படுத்தும் என்பதன் அடிப்படையில், எதிர்பார்பார்க்கப்பட்ட செலவினமாக அதிகாரசபையால் வெளிப்படுத்தப்பட்டிருந்துடன் அப்பெறுமதியானது எதிர்பார்பார்க்கப்பட்ட செலவாக காட்டப்பட வேண்டுமென நிதிப்பிரிவினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், வேறு அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்திடம் இது போன்ற செயற்திறன் பரிசோதனை நடாத்த முடியாது என்பதை தெரிவிப்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட செலவிடுகளுக்கான ஒதுக்கீடுகள் அதிகார சபையினால் மேற்கொள்ளமுடியாது காணப்படுகின்றன. | சரியாக கணக்கில் காட்டப்பட்டிருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 98,417,594 தொகையான மிகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 63,112,780 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 35,304,814 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் இந்த முன்னேற்றத்திற்கு முக்கியமாக காரணமாக ஆதனம், பொறி, இயந்திர மற்றும் உபகரணங்களின் மறுமதிப்பீட்டால் ஏற்பட்ட மிகை ரூபா 38,915,343 பிரதான காரணங்களாகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் மனித வளங்கள் முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை அறியும் நோக்கத்தில் மனித வள கணக்காய்வினை மேற்கொள்வது தொடர்பாக இலங்கை பணிப்பாளர் முகாமைத்துவ நிறுவனத்துடன் 02 திசெம்பர் 2016ஆம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது தொடர்பாக அந்நிறுவனத்திற்கு 2017 ஏப்ரல் 20 ஆம் திகதி ரூபா 219,000 பெறுமதியான முற்பணம் செலுத்தப்பட்டிருந்துடன் ஒப்பந்தத்தின் படி முற்பணம் செலுத்திய நாளிலிருந்து மூன்று(03) மாதங்களுக்குள் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. எனினும் 2019 யூலை 31 ஆம் திகதி கணக்காய்வு வரை பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட்ட தொகைக்கு ஏற்ப தேவையான அறிக்கையைப் பெற ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | பணி நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 39 (2) இன் படி, அமைச்சர் பாவனையாளர் அலுவல்கள் சபைக்கு மூன்று உறுப்பினர்களை நியமிக்க வேண்டும், எனினும் 31 திசெம்பர் 2018 ஆம் திகதி வரை இரண்டு உறுப்பினர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். சட்டத்தின் 19 வது பிரிவின் கீழ் சபைக்கு குறிப்பிடப்பட்ட விடயங்களின் விசாரணை இரண்டு(02) மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கைகள் வழங்கப்படும். இவை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும் 2017 இல் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு விசாரணைகள் தொடர்பான | அனைத்து உறுப்பினர்களும் தற்போது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். விசாரணைகளுக்காக சபை விடுத்த ஆறு கோரிக்கைகளில் இரண்டு அறிக்கைகள், அதாவது அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலை மற்றும் உடற்பயிற்சி புத்தகங்களுக்கான அதிகபட்ச சில்லறை விலை ஆகியவை நிறைவடைந்துள்ளன, மீதமுள்ள அறிக்கைகள் விரைவாக முடிக்கப்பட்டுள்ளன. | பாவனையாளர் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 39 (2) இன் படி செயல்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விசாரணை அறிக்கைகள் 2019 மார்ச் 31ஆம் திகதி வரை பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் 03 மாதங்கள் முதல் 11/2 வருட காலமாக தாமதங்கள் காணப்படுகின்றன. | | |
| (ஆ) | 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் திருத்தங்கள் 2004 இல் ஆரம்பிக்கப்பட்டு, மதிப்பாய்வு செய்யப்பட்டு 15 வருடங்கள் கடந்தநிலையிலும், இற்றைவரை திருத்தம் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்ட துறையால் முறையாக ஆய்வு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டு தேவையான நோக்கங்களுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் திருத்தம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 ஆம் ஆண்டின் 09 இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 61 (1) மற்றும் 61 (2) இன் படி, ஏதேனும் பொருட்கள் ஒன்றினை அதன் தரத்திற்கும் நியமங்களுக்கும் உட்பட்டு காணப்படாதுவிடத்தில் அதனை உறுதிப்படுத்தி கொள்ளவேண்டுமெனின் அதன் மாதிரியை பரிசோதிப்பதற்காக அனுமதி பெற்ற இராசாயன பரிசோதகரிடத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு அனுமதியுண்டு. இராசாயனப் பரிசோதகரினால் உரிய பரிசோதனை அறிக்கையினை ஒரு மாதத்திற்குள் பாவனையாளர் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 563,407 செலவிட்டு 46 மாதிரிகள் இராசாயன பரிசோதகரிடம் அனுப்பப்பட்டு 08 மாதிரிகளுடன் தொடர்பான அறிக்கைகள் 2019 சனவரி 31 ஆம் கணக்காய்வு திகதி வரை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என்பதுடன் அதில் 03 மாதிரிகளுக்கான அறிக்கை உரிய காலத்தில் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | உரிய காலகட்டத்தில் மாதிரிகளை பரிசோதனைகள் செய்து அதன் அறிக்கைகளை வெளி இராசாயன ஆய்வகங்களிலிருந்து பெற முடியாமலிருந்தது. இவை அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்கு புறம்பாக நடைபெறும் நடவடிக்கை என்பதால் அதற்குரிய திட்டங்களை அதிகாரசபையுடன் இணைக்கப்பட்ட ஆய்வகங்களில் பரிசோதனைக்குட்படுத்தி கொள்வதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளைப் பெற திறைசேரியிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. ஆதன் மூலம் இவ்வாறான தாமதமான குறைபாடுகளை தவிர்த்து கொள்ள முடியும். | சட்டத்தின் பிரிவு 61 (2) இல் குறிப்பிடப்பட்ட விடயத்திற்கமைய செயல்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2003 ஆம் ஆண்டின் 09 அம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 8 (ஈ) இன் படி, சந்தை நிலைமைகள் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வது, அறிக்கைகளை வெளியிடுவது மற்றும் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவது அதிகாரசபையின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாகும். ஆய்வு அறிக்கைகள் 2018 செப்டம்பர் 25 ஆம் திகதி அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அவ் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருந்த தகவல் தொடர்பான விடயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்துவதல் போதியளவு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆதிகார சபையினால் தற்போது மக்களுக்கு தெளிவுபடுத்து தொடர்பாக விசேட அறிக்கை தயாரிக்கப்பட்டுமிடத்து பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டதன் பின்னர் பரிந்துரைக்கப்பட்ட தகவல்களை அதிகார சபையின் இணையத்தளத்தில் மற்றும் முகநூல், துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு மாவட்ட அளவிலான கிளைகளுக்கு அனுப்புவதன் மூலம் அதைப் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆய்வு அறிக்கையில் உள்ள தகவல்களைப் பற்றி போதுமான பொது விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டினை முன்னைய ஆணடுடன் ஒப்பிடும் போது அதிகார சபையின் தகவல் அளிக்கும் உத்தியோகத்தகர்கள் 193 எண்ணிக்கையினால் அதிகரித்து காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு களப்பரிசோதனையினை மேற்கொள்வதற்கு தேவையான சதவீதம் முன்னையாண்டுடன் ஒப்பீடும் போது 6 சத வீதத்தினால் குறைவடைந்திருத்தது. மேலும், 10 மாவட்டங்களில் களப்பரிசோதனையினை இலக்கினை அடைவதற்கான சதவீதம் முன்னைய ஆண்டை விட 9 முதல் 26 சதவீதம் வரை வேறுபாடுகள் காணப்பட்டன. இவ் 10 மாவட்டத்தில் மேலதிகமாக 06 உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த களப்பரிசோதனையில் குறைவுகள் காணப்பட்டிருந்தன. | மேலதிக தகவல் அளிக்கம் அதிகாரிகளை நிரந்த பணியிடங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அவர்களை பணியிடத்தில் வேலை பயிலுனராக பயன்படுத்தப்பட்டிருந்தது அவ் உத்தியோத்தர்களிடமிருந்து அதிகார சபைக்கு தேவையான பங்களிப்பினை பெற்றுக் கொள்வதற்கு பயிற்சிக்காலம் முடிவடைந்து அவர்களை நிரந்தர பணியிடங்களுக்கு நியமிக்கப்பட்ட பின்னரே பெற்றுக்கொள்ள முடியும். தற்பொழுது இச்செயற்பாடுகள் முழுமையாக நிறைவடைந்துள்ளமையினால் அவ் உத்தியோகத்தர்களின் பணிப் பங்களிப்பினை எதிர்காலத்தில் மதிப்பீட்டுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. | பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட அல்லது தீர்க்கப்படாத விசாரணைகளின் எண்ணிக்கையை இனங்காணக்கூடியவாறான ஒரு தரவுத்தளத்தை செயல்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கொழும்பு, களுத்துறை, மாத்தறை, இரத்னபுரி மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் மக்கள் தொகை மற்றும் சந்தைகளின் பெறுமதி மற்றைய மாவட்டங்களை விட அதிகமாக காணப்படுவதுடன் மீளாய்வாண்டில் அந்த மாவட்ட அலுவலகங்கள் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த களப்பரிசோதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1010 ஆகவும் அல்லது 16 சதவீதம் குறைவடைந்து காணப்படுகின்றது. | இந்த இலக்குப்படுத்தப்பட்ட பரிசோதனைக்கான பிரதான காரணமாக காணப்படுவது பரிசோதனை இலக்கினை தெரிவிப்பதற்கு உரிய மாவட்டத்தில் அந்தப் பரிசோதனைகளை தொடர்புபடுத்துவது மற்றும் இலக்குப்படுத்தப்பட்ட பரிசோதனைகளினை மேலும் சாதகமான உபயோகத்திற்கு சேர்த்துக்கொள்ள முடியும். சமூக நலன்களை அதிகரித்து காட்டக்கூடிய விதத்தில் பரிசோதனைகள் காணப்பட வேண்டியதுடன் அவ்வாறான பரிசோதனைகள் தொடர்பாக கூடிய காலத்தினை செலவிட வேண்டியிருப்பதுடன் அதிகாரசபையினால் இச்செயற்பட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது எண்ணிக்கையில் இலக்கினை அடைந்து கொள்வதினை மட்டுமன்றி உயர் தரத்தில் காணப்படுகின்றதா என்பதுடன் இவை தொடர்பான காலம், மேலதிக நேரம் தேவைப்படுவதனால் எண்ணிக்கை அடிப்படையிலான பரிசோதனை இலக்கில் ஒப்பீட்டு ரீதியாக குறைவு காணப்பட்டிருந்தது. | ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மக்கள் தொகை மற்றும் சந்தைகளின் எண்ணிக்கையை கவனத்தில் கொள்ள வேண்டும். |
| (உ) | அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 61(1)(ஆ) இன் படி, ஏதேனும் பொருள் ஒன்றின் மாதிரிகளை பெற்றுக் கொண்ட பின்பு ஆறு(06) வாரங்களுக்கு அதிகரிக்காத காலத்திற்கு அத்தகைய பொருளின் விற்பனை அல்லது விற்பனையை வெளியிட வேண்டாம் என்று உற்பத்தியாளர் அல்லது வர்த்தகர் உத்தரவு வழங்கப்படமுடியும். இருப்பினும், மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த மாதிரிகள் 46 இல் 16 மாதிரிகள் உரிய இரசாயன பரிசோதனை அறிக்கைக்கிணங்க தரங்களை பூர்த்தி செய்யாத மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களைக் கொண்ட பொருட்களின் மாதிரிகள் | பிரிவு 61(1) இன் படி பொருட்களின் மாதிரிகள் கிடைக்கப் பெற்று ஆறு(06) வார காலத்திற்கு அத்தகைய பொருட்களின் விற்பனை அல்லது வெளிப்படுத்தல் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக, எதிர்காலத்தில், இதுபோன்ற உத்தரவுகளை வழங்க முடியாது என்பதை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். | மாதிரிகளைப் பெற்றுக்கொண்ட ஆறு(06) வாரங்களுக்கு அதிகரிக்காத காலத்திற்குள் விற்பனை அல்லது விற்பனை வெளிப்படுத்தல் தொடர்பான உற்பத்தியாளர் அல்லது வர்த்தகருக்கு உத்தரவு தடை வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக அதிகார சபையினால் உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளருக்கு உரிய கட்டளைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | மீளாய்வாண்டில் இறக்குமதியாளர்களிடமிருந்தும் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து அதிகபட்ச விலை சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள 280 விண்ணப்பங்களை அதிகாரசபை பெற்றுக்கொண்டுள்ளதுடன் அதில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக நிறுவனங்கள் மற்றும் களஞ்சியசாலைகள் அதிகாரசபையினால் பரிசோதனைகள் 89 விண்ணப்பங்களுக்கு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது 32 சதவீதமாக காணப்படுகின்றது. | மீளாய்வாண்டில் இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான அதிகபட்ச விலையை உறுதி செய்வதற்காக 53 நிறுவனங்களிலிருந்து 280 விண்ணப்பங்கள் பெறப்பட்டன, மேலும் இதுபோன்ற ஒவ்வொரு விண்ணப்பமும் சம்பந்தப்பட்ட களஞ்சியசாலை அதிகாரியினால் சரிபார்க்கப்பட்டு அதிகபட்ச விலையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து அதிகபட்ச விலை சான்றிதழ்கள் அதிகாரசபையால் பெறப்பட்ட விண்ணப்பங்களில் தொடர்புடைய களஞ்சியசாலை அதிகாரியினால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | 2003 ஆம் ஆண்டின் 09 இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 13 இன் படி, பாவனையாளர் அதிகார சபையின் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் அதிகார சபைக்கு பாவனையாளர் முறைப்பாடுகள் 2092 கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அதில் தீர்க்கப்பட்ட அல்லது தீர்க்கப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கையை இனங்காணக்கூடிய வகையில் ஒரு தரவுத்தளம் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2016,2017 மற்றும் 2018 அதிகார சபையினால் பெறப்பட்ட 13 முறைப்பாடுகள் உரிய காலத்தில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக நீங்கள் கோரிய மாதிரிக்கமைய முழுமையான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முறையான வேலைத்திட்டம் செயற்படுத்துவதற்கு தேவையான அனைத்து காரணங்களும் இவ்வருடத்தில் தீர்க்கப்படுவதுடன் இது தொடர்பான புதிய தொழில்நுட்ப முறைமையிலான தரவுத்தளம் தயாரிக்கப்படும். | பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட அல்லது தீர்க்கப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கையை இனங்காண ஒரு தரவுத்தளத்தை செயல்படுத்த வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆகஸ்ட் 08 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பொதுப்பணிப்பாளர் பதவிக்கு நியமிப்பதற்கு பாவனையாளாட அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் பிரிவு 52(1) இன் படியும் பொதுப் பணிப்பாளர் 2018 செப்டம்பர் 14 ஆம் திகதி நியமிக்கப்பட்டர். | தற்போதைய பொது பணிப்பாளின் நியமனம் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 52 (1) இன் கீழ் அமைச்சரால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், பணிப்பாளர் சபையின் தலைவர் பணிப்பாளர் சபையின் பரிந்துரையின் பின்னர் அதிகார சபைச்சட்டஅதிகார சபையின் பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமான நபரை பரிந்துரைக்கப்பட்டதன் பின் நியமனம் வழங்கப்பட்டது. | ஆட்சேர்ப்பு நடைமுறையில குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆணையாளரினால் 214 விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தவர்கள் தொடர்பாக 2019 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை அவர்களுடைய தகைமைகள் தொடர்புடைய நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மாவட்ட அலுவலகங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு மேலாக 38 அதிகாரிகள் மாவட்ட அலுவலகங்களுக்குள் நியமிக்கப்பட்டிருந்ததனர். | மீளாய்வாண்டில் பதவிக்கு நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகள் 214 எண்ணிக்கையான அதிகாரிகளினுடைய குறைந்தபட்ச தகைமையினை மனித வளங்கள் பிரிவின் மூலம் உறுதிப்படுத்திய பின்பே பதவிக்கு நியமிக்கப்பட்டனர் | தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து பொருத்தமான தகுதிகளை சரிபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | விசாரணை அதிகாரிகள் ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திற்கும் 406 விசாரணை அதிகாரிகளை நியமிப்பதில் 8 மாவட்டங்களில் 60 அதிகாரிகளின் சேவைக்கு தேவையாகவும், 16 மாவட்டங்களில் 104 அதிகாரிகளின் சேவைகளுக்கு தேவையாகவும் உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்ட 98 விசாரணை அதிகாரிகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விசாரணை அதிகாரிகள் எந்த மாவட்டத்துடனும் இணைக்கப்படவில்லை. அவர்கள் ஒரே மாவட்டங்களில் வேலை பயிற்சிக்காக மட்டுமே நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும் அவர்கள் இவ் ஆண்டின் யூலை முதல் அவர்களுடன் சரியாக இணைக்கப்படுவர்கள். இருப்பினும், மிகையான பயிற்சிக்கான விடயங்கள், உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக அல்ல என்பதை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். | விசாரணை அதிகாரிகளா மேற்கொள்ளப்பட வேண்டி அதிகாரத்தின் நோக்கங்களுக்காக ஒ முறையான பொறிமுறையை உருவாக்க வேண்டும். |